# ஐந்திணை எழுபதில் வாழ்வியல் கருத்துக்கள்

**முனைவர் சே.சாபிராபேகம்**
**இணைப் பேராசிரியர்,**
**காதிர் முகைதீன் கல்லூரி, அதிராம்பட்டினம்.**
dr.sabira.kmc@gmail.com

28

**ஆய்வுச்சுருக்கம்**

சங்ககாலத் தமிழர்களின் வாழ்க்கைச் சிறப்புகள், அவர்களின் ஒழுகலாறுகளைப் பற்றிக் கூறுவது பண்பாடும் கலாச்சாரமும் ஆகும். இவை சார்ந்த கருத்துக்களை வாழ்வியல் கருத்துக்கள் என்று கூறலாம். வாழ்வியல் என்பது மக்களின் அகவாழ்வு பற்றியும் புறவாழ்வு பற்றியும் அவற்றின் கூறுகளான காதல், இல்லறம் போன்றவை எவ்விதம் அவர்கள் வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதைப் பற்றிக் கூறுவது ஆகும். அதன் அடிப்படையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு மடல் ஏறுதல், பகல் இரவு சந்திப்பு, காதலுக்கு அடுத்த நிலையான கற்பிற்கு எடுத்துச் செல்லும் வரைவு, வெறியாடல், அலர், இற்செறித்தல், தூது அனுப்புதல், குறை நயப்பித்தல், கைக்கிளையான ஒருதலைக்காதல், பசலை, காதலின் சிறப்பு, வரைவு மலிதல், நொதுமலர் வரைவின் இலக்கணம், அறத்தோடு நிற்றலின் சிறப்பு, கற்பு வாழ்க்கையில் இடம் பெறுவதான பிரிவு, செலவழுங்கள், பரத்தையின்பாற் செல்லுதல், விருந்தோம்புதல், கைமைநோன்பு போன்ற பல கருத்துக்கள் பற்றிய விரிவான ஆய்வானது இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**முன்னுரை**

“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தை வாளொடு முன் தோன்றிய மூத்த குடி” என்னும் சொல்லாடல் தமிழ்மொழியின் தொன்மையை விளக்கி நிற்கும். அம்மொழி பேசும் தமிழரின் பண்பட்ட வாழ்வையும், பண்பாட்டையும் பறைசாற்றுகின்ற செம்மொழியான பழந்தமிழ் இலக்கிய இலக்கண வளங்களையும், பண்புசார் உலக இயல்புகளையும் தன்னகத்தே கொண்டு இயங்குகிறது. உயர்தனிச் செம்மொழியாகத் தமிழ்மொழி விளங்குகின்றது. சங்கப் புலவர்கள் காதலையும், வீரத்தையும் இரு கண்களாக கருதியது போல அறத்தை உயிராக மதித்தார்கள். தாம் பாடிய பாடல்களில் அறக்கருத்துக்களை உள்ளீடாக வலியுறுத்தி உள்ளனர். ஆதலால், தமிழ் இலக்கியப் பரப்பில் அறநூல்கள் தோன்றி வளர்ந்தன. அறநூல்கள் தோன்றுவதற்கு முன்பே தொல்காப்பியக் காஞ்சித் திணையிலும், பாடாண் திணையிலும் கூறிய பல துறைகள் நீதிகளாகவும், தத்துவங்களாகவும் பிறந்திட வழி வகுத்தன. அதன் அடிப்படையில் பல்வேறு நீதி இலக்கியங்கள் தோன்றின. களர்ப்பிரர் காலத்தில் தனிப்பெரும் நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும். அக இலக்கியத்தை சார்ந்த நூல்களுள் ஒன்றான பைந்தமிழ் பழச்சுவை ஐந்திணை எழுபதில் அமைந்துள்ள வாழ்வியல் கருத்துக்கள் பற்றி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வாழ்வியல்**

வாழ்வியல் என்பது தனி மனிதன் ஒருவன், எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று

நினைத்து வாழ்வதில்லை. வாழ்க்கையை இப்படித்தான், இம்முறையில்தான் வாழ வேண்டும் என்று கற்றுத் தருவதே வாழ்வியல். வாழ்வியலின் கூறுகளாகப் பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம் என்ற இம்மூன்றையும் கூறலாம். ஏனெனில் ஒரு நாட்டின் அல்லது ஒரு சமூகத்தின் பண்பாட்டைக் கொண்டே அவர்களின் வாழ்க்கை முறை அறியப்படுகிறது. தமிழர்களின் வாழ்க்கை நெறியானது அகம், புறம் என இரண்டாகப் பகுக்கப்பட்டிருந்தது. அதில் இல்வாழ்க்கை நெறி அகம் எனப்பட்டது. அக வாழ்க்கை அக்காலச் சமுதாயத்தின், உள்ளத்தின் ஓட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் சமுதாயக் கட்டமைப்பையும் விளக்கி நிற்கிறது.

அகவாழ்க்கைக்கு அறம் சார்ந்த இன்பங்களே அடிப்படையாக அமைகின்றன. இத்தகைய அகவாழ்வை விளக்கும் இலக்கியங்கள் ஆடவர் பெண்டிரின் மன உணர்வுகளை மையமாகக் கொண்டு எழுந்தவையாகும்.

**களவு வாழ்க்கை**

அக வாழ்க்கையானது களவு, கற்பு என இருவகையாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. திருமணத்திற்கு முன்னர் அமைந்த காதல் வாழ்க்கையே களவு எனப்பட்டது. திருமணத்திற்குப் பின்னர் அமைந்த இல்வாழ்க்கை கற்பு வாழ்க்கை எனப்படுகிறது.

தலைவனும் தலைவியும், பிறர் அறியாமல் மேற்கொள்கிற அன்பு வாழ்வே களவு ஆகும்.

இளமை, கல்வி, குலம், செல்வம் போன்றவற்றில் ஒத்த தலைவனும், தலைவியும், தம் காதலைப் பிறர்க்குத் தெரியாமல் வெளிப்படுத்தி ஒழுகும் ஒழுக்கம் களவு எனப்படும். இக்களவு வாழ்க்கையினை வெளிப்படுத்தப் பல்வேறு வாழ்வியல் கூறுகள் நிகழ்கின்றன.

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியர் கூட்டம் என்ற நான்கு நிலைகளில் களவு நிகழ்ச்சிகள் அமைகிறது. இக்களவு நிகழ்ச்சிகளுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியம்.

**காமப்புணர்ச்சியும் இடர் தலைப்படலும்**
**பாங்கொடு தழா அலும் தோழியிற் புணர்வுமென்று**
**ஆங்கநால் வகையினம் அடைந்த சார்வொடு**
**மறையென மொழிதல் மறையோர் ஆறே**[1] (தொல்-செய்-நூ-487)

என்கிறார்.

**இயற்கைப் புணர்ச்சி**

களவு நிகழ்ச்சிகளுள் ஒன்றான இயற்கைப் புணர்ச்சி என்பது தெய்வத்தால் நிகழ்வது என்று கூறப்படுகிறது. முற்பிறவியில் செய்த நல்வினையின் காரணமாகத் தலைவியைத் தலைவன் காண்பான். பின்னர்த் தலைவியை தலைவன் இயற்கைப் புணர்ச்சியால் அடைவான். இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணமாக நம்பியகப் பொருள்,

***தெய்வம் தன்னில் எய்தவும் கிழத்தியின்***
***எய்தவும் படூஉம் இயற்கைப் புணர்ச்சி***[3] (அகத்-பொ-வி-நூ-32)

என்று கூறுகிறது. இத்தகைய இயற்கைப் புணர்ச்சியானது தெய்வம் கூட்டக் கூடுதலினாலும்,

விதியானது கூட்டக் கூடுதலினாலும் தெய்வப் புணர்ச்சி எனப்படுகிறது.

முதல் முதலாகக் கூடுதலால் முன்னுறு புணர்ச்சி எனவும், மனக்குறிப்பின்றி எதிர்பாராத நிலையில் இயல்பாக நிகழ்வதால் இயற்கைப் புணர்ச்சி எனவும், அன்பினால் கூடும் கூட்டமாவதால் காமப்புணர்ச்சி எனவும் கூறப்படுகிறது.

இயற்கைப் புணர்ச்சியின் போது தலைன், தலைவியைக் காண்கிறான். கண்டதும் காதல் ஏற்படுகிறது. தலைவி தன்னைக் கண்டு காதல் கொள்ளுமாறு அவளின் அழகினையும், சிறப்பினையும் தலைவன் கூறுவதுடன், தலைவியின் பெற்றோரையும் புகழ்ந்து கூறுகிறான். இது இயற்கைப் புணர்ச்சியில் தலைவன் கூற்றாகவும் அமைகிறது. இதனையே ஐந்திணை எழுபது தலைவனும் தன் தலைவியிடம் இன்புற்று,

**மன்றத்துறுகல் கருங்கண் முகஉகளும்**
**குன்றக நாடன் தெளித்த தெளிவினை**
**நன்று என்று தேறித் தெளிந்தேன், தலையணி**
**ஒன்று மற்று ஒன்றும் அனைத்து**[3] (ஐந்திணை எழுபது பா-9)

தலைவனுக்கும், எனக்கும் நேர்ந்த காதலின் அருமையை நன்று என்று தெளிந்து அறிந்துள்ளேன். அவனது அன்பு என்னைக் காக்கும் என்று தலைவி கூறுவதை அறிய முடிகிறது.

இயற்கைப் புணர்ச்சியானது இலக்கியத்தில் "சரி" என்று கூறப்பட்டாலும் நடைமுறைக்கு அது ஏற்றதல்ல. தலைமக்களின் மெய்யறு புணர்ச்சிக்குப் பின் தலைவன் தலைவியை ஏமாற்றினால் அப்பெண்ணின் நிலை என்னவாகும்? சமூகத்தில் ஆணும், பெண்ணும் செய்த இத்தகைய தவறுக்குப் பெண்ணே குற்றவாளியாகக் கருதப்படுவாள். ஏனெனில் பெண்ணின் உடற்கூறானது செய்த தவறைச் சுட்டிக்காட்டும். ஆணிற்கு அத்தகைய நிலை ஏற்பட வாய்ப்பில்லை. பெண் சிறிது சரிந்தாலும் அவள் மட்டுமல்ல அவளின் குடும்பமும் தலை கவிழ நேரும். எனவே தான் திருமணம் என்னும் அமைப்பைப் பெரியோர்கள் உருவாக்கியுள்ளனர். இன்றும் ஆண், பெண்ணை ஏமாற்றும் அவல நிலை சமூகத்தில் நிலவிக்கொண்டுதான் இருக்கிறது. அதற்கு அப்பெண்ணும் காரணமாகிறாள் என்றால் மறுப்பதற்கில்லை.

**இரவுக்குறி**

இரவுக்குறியானது வீட்டின் எல்லைக்குட்பட்டதாய், வீட்டில் உள்ளோர் பேசும் பேச்சைக் கேட்கும்படியாக அமைவது என்பதை,

**".. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இரவுக்குறி**
**இல்வரை இகவா இயல்பிற்று ஆகும்"**[4] (அக-பொ-வளி-நூ-38)

என்று அகப்பொருள் விளக்கமும்,

**இரவுக்குறியே இல்லகத் துள்ளும்**
**மனையோர் கிளவி கேட்கும் வழி யதுவே**
**மனையகம் புகா அக் காலையான**[5] (தொல்-கள-129)

இரவுக்களவின் தொடக்கத்துக் கூட்டம் தலைவி வீட்டின் புறத்து நடக்கும் என்றும், சில

நாளைக்குப் பின் அச்சம் ஒழிந்து உள் மனையிலும் சென்று களவு நிகழ்த்துவர் என்றும் நச்சினார்க்கினியர் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை அமைத்துள்ளார்.

**குறை ஒன்று உடையேன் மற்றோழி குறை இல்லாத**
**மன்னுயிர்க்கு ஏமம் செயல் வேண்டும் இன்னே**
**அராவழங்கு நீர் சோலை நாடனை நம்இல்**
**இராவரால் என்பது உரை**[6] (ஐ-ஏ-14)

என் அன்பிற்கினிய தோழியே! உன்னால் எனக்கு ஆக வேண்டிய செயல் ஒன்று இன்னமும் இருக்கிறது. அது என்னவென்றால் உறுதியில்லாத என் உடலோடு பொருந்தியுள்ள உயிர்க்கு ஒரு பாதுகாப்பு நீ செய்து தர வேண்டும். பாம்புகள் நடமாடும் நீண்ட சோலைகள் உடைய மலைநாட்டுத் தலைவனை நம் வீட்டின் பக்கம் இரவுப் பொழுதில் வரவேண்டாம். பகல் பொழுதில் திருமண வரைவோடு வரவேண்டும் என்பதைச் சொல்லுவாயாக. ஊரார் பழிக்கு ஆளாக நேரும் என்பதால் தலைவி கவனமாகத் தலைவனைப் பகல் பொழுதில் வரைவோடு வரச் சொல்லித் தோழியிடம் கூறுகின்றாள். (பா.எண்.60, 61, 62)

இரவுக் குறியிடத்துத் தலைவனைச் சந்தித்த தலைவி இல்லம் திரும்பினாள். திரும்பிய அவளுக்குத் தூக்கம் வரவில்லை. அப்போது தோழியிடம் உரைத்தது.

**மணி நிற நெய்தல் இருங்கழிச் சேர்ப்பன்**
**அணி நலம் உண்டு அகன்றாள் ; என்கொல், எம்போல்**
**தனி மணல் எக்கர்மேல் ஓதம் பெயர**
**துணி முந்நீர் தஞ்சாதது?** (ஐ.தி.பா-61)

தலைவனைச் சந்தித்துத் திரும்பிய எனக்கு உறக்கம் வராமைப் போலக் கடலுக்கும் உறக்கம் வரவில்லை. நெய்தல் நிலப் பூக்கள் பூத்த உப்பங்கழிகளை உடைய தலைவன் என் அழகையும், நலத்தையும் உண்டு அகன்று விட்டான் என்று கடலும் தூங்காது இருக்கிறது போலும். (நான் உறங்காதது போலக் கடலும் உறங்காமல் இருக்கிறது. காரணம் நான் அவனை நினைத்து உறங்காமல் இருக்கிறேன். கடல் என்னை நினைத்து உறங்காதிருக்கிறது).

தலைவன், களவில் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்கிறான். அவன் விரைவில் திரும்பி வாரா நிலையில் அன்றிலைப் பார்த்துத் தோழி உரைத்தது.

**தெண் நீர் இருங்கி, வேண்டும் இரை மாந்தி**
**பெண்ணைமேல் சேக்கும் வணர் வாய்ப்புணர் அன்றில்!**
**தண்ணம் துறைவற்கு உரையாய், மடமொழி**
**வண்ணம் தா என்று தொடுத்து** (ஐ.பா.64)

தெளிந்த நீரை உடைய உப்பங்களியில் வேண்டும் அளவு இரை தின்று அருகில் உள்ள பனை மரத்தில் ஓய்வு கொண்டிருக்கும் துணை மேல் காதல் உடைய அன்றில் பறவைகளே! களவில் தலைவியுடன் பழகி அவளிடம் இருந்து பறித்துக் கொண்ட அழகைத் திருப்பித்தா என்று கடலோரத் தலைவனிடம் சென்று சொல்லுங்கள். (பிரிவின் மூலம் தலைவன், தலைவியின் அழகை

அள்ளிக்கொண்டு போய்விட்டான் என்பதைச் செய்யுள் உணர்த்துகிறது. தலைவனிடம் மீண்டும் மீண்டும் சொல் என்பதைத் தொடுத்து எனும் சொல் உணர்த்தி நிற்கிறது.)

**கற்பு வாழ்க்கை**

இயற்கைப் புணர்ச்சியால் தாமே கண்டு தம்முட்புணர்ந்து களவில் வாழும் காதலர்கள் ஊரறிய மணந்து இல்லறம் நடத்தும் கற்பு வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதே அகத்திணையின் உயரிய நோக்கமாகும். இதனை நிகழ்த்தும் பொறுப்பும் கடமையும் தோழியையே சாரும். தோழி எவ்வாறு குறியில் தலைமக்களுக்கு உதவுகிறாளோ, அதைவிடப் பன்மடங்கு தலைவியின் வரைவு குறித்து தலைவனிடம் வரைவுணர்ச்சியை ஏற்படுத்துவாள். இதற்கு வழி, குறி மறுத்தலே என்று எண்ணித் தலைவியைக் காணவரும் தலைவனை, அவளைக் காணவிடாது தடுப்பாள். எனவேதான் கற்பொழுக்கத்தைக் காட்டிலும் களவொழுக்கத்தில் தோழியின் துணை இன்றியமையாததாக உள்ளது என்பதனை அறிய முடிகிறது.

களவில் ஈடுபட்ட தலைமக்கள் நெஞ்சங்கள் அடுத்து செய்ய வேண்டியது என்ன என்பதை உணராத தன்மையினை உடையன. இதனால் வரும் விளைவுகளையும் தலைமக்கள் உணராது இருப்பர். ஆனால் தோழி களவு நீடிப்பதால் ஏற்படப்போகும் விளைவுகளை முன்னரே எண்ணி அதற்கு வகை செய்வாளாய் திருமணம் செய்து கொள்க என்று தலைவனுக்கு நெருக்கடி தருவாள். இதனை விளக்கும் விதமாக ஐந்திணை எழுபது குறிஞ்சித்திணைப் பாடல் ஒன்று,

**களவொழுக்கம் வேண்டாம்!**

**கற்பொழுக்கம் பேணத் தலைவியை**

**மணம் முடிக்கத் தலைவா வா!!**

**பிரசம்கொள வீழ்ந்த தீந்தேன் இறாஅல்**
**மரையான் குழவி குளம்பில் துகைக்கும்**
**வரையக நாட! வரையாய் வரின்எம்**
**நிரைதொடி வாழ்தல் இலள்.**[7] (ஐ-தி-பா-10)

மலைக்குன்றுகளின் உச்சியில் தேனீக்கள் கட்டிய தேனடையில் இருந்து தேனைப் பிழிந்து எடுத்துக் கொண்டு கீழே போட்ட இனிப்பான தேன் இருந்த தேன்கூட்டை மலைமான்களின் கன்றுகள் தங்கள் கால் குளம்படியில் போட்டு மிதிக்கும் வளம் நிறைந்துள்ள மலைகள் இருக்கும் நாட்டின் தலைவா! எம் தலைவியை மணம் முடித்துக் கொள்ள வருவாயாக! (அப்படி மணம் முடித்துக் கொள்ள வராமல்) எம் தலைவியோடு களவில் கூடி மகிழவே வருவாயானால், வரிசையாக வளையல்கள் அணிந்த எம் தலைவி (இதனைத் தாங்காமல்) உயிரையே விட்டு விடுவாள். (எனவே, களவொழுக்கம் கொள்ளாது வரைவுக்கு வருக என்பது குறிப்பு). களவொழுக்கத்தைப் பற்றிக் கூறும் வ.சுப.மாணிக்கனார்

**களவொழுக்கம் தூயது, கள்ளவொழுக்கம் தீயது, களவு காதலர் மானமாசற்றவர், மணந்து கொள்ளும் உள்ளத்தினர், வெளிப்பட்ட பின்னும் வாழ்பவர், கள்ளக்காதலர் தம்முள் அன்பற்றவர், மணம் என நினையர் வஞ்சகர், வெளிப்படின் மாய்பவர் அல்லது**

**மாய்க்கப்படுவர். காதலுக்குத் திருமண மின்றேல் சமுதாயத்துக்கு வாழ்வில்லை.**[8]

என்று கூறியுள்ளார்.

**வெறியாட்டு**

பலியிடுதல் என்பது தெய்வத்தை அமைதிப்படுத்தக் கையாண்ட வழிபாட்டு முறையாகும். வெறியாட்டின் போது பலியிடுதல் என்ற சடங்கு முறையானது, தெய்வத்தின் சீற்றத்தினைத் தணிப்பதற்கு ஆற்றிய செயல்முறையாகக் கருதத்தக்கது. வெறியாட்டு என்பது மிகப் பழங்காலத்திற்கு முன்பே தமிழ்ச்சமுதாயத்தில் வேரூன்றிப் புரையோடிய முருகன் வழிபாட்டு முறையாகும். வெறியாட்டு எடப்போன், வேலன் என அழைக்கப்படுகிறான். முருகனை வழிபடுபவனும், அவனுக்கு வழிபாடு செய்பவனும் வேலன் எனப்படுகிறான்.

களவின் வழி தலைவி ஒருத்தியின் மேனி நாள்தோறும் மெலிந்து வருவதைச் செவிலித் தாய் காண்கிறாள். மரபு வழிப்பட்ட இத்தாய் உண்மையை ஊகித்தறியாமல் இவ்வேறுபாடு எதனாலாயிற்று என்று அறிவரை வினாவ, அவர்கள் குறிபார்த்து, தெய்வத்தினாலாயிற்று எனக் கூறினர். தாய் முருகனால் வந்தது என்று நம்பி முருகனுக்குப் பூசை செய்கிறார். முருக பூசை செய்யும் வேலன், தலைவி முருகேறப் பெற்றவள் என்று கூறுகின்றான். தலைவியின் நோய்க்குப் பிறிதொரு காரணம் கற்பிக்கப்படுவதை தலைவியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே தெய்வத்தைச் சாடுகிறாள். என் நோய் காதல் நோய் ; தலைவனின் மார்புத் தழுவலால் வந்த நோய். கடவுளான நீ இதனை அறிந்திருப்பாய். அறிந்து வைத்து மரபறிவு அன்றி மெய்யறிவு இல்லாத பூசாரி அழைக்க, தோன்றிய முருகனே! என் சொல்வது? கடவுளாயினும் உனக்குத் தன்னறிவு இல்லை.

**பிரிவும் செலவழுங்களும்**

தலைமக்களுக்குத் திருமணத்திற்குப் பின் தன் கடமைகளைச் செய்து குடும்பம் நடத்துவதற்குப் பொருள் வேண்டும். கவலையின்றி மனைவியோடு மகிழ்ந்திருத்தல், மற்றாரிடத்து இரந்து நில்லாமை, தன்னிடம் வந்து இரப்போர்க்கு இல்லை என்று கூறாது கொடுத்தல், சுற்றத்தாருக்கு உதவி செய்தல் போன்றவை ஆடவனுக்குரிய கடமைகளாகும். இதன் பொருட்டு காதல் மனைவியை விட்டு பொருளீட்ட வெளியூரோ, வெளிநாடோ செல்வான் தலைவன். இப்பிரிவு இன்றியமையாத உலகியல் அறம் எனலாம்.

பொருள் வயிற்பிரிவு, களவு காலத்திற்கும் உரியதாக அகப்பொருள் விளக்கம் கூறுகிறது. இதனை விரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் என்ற பெயருடன் அமைகிறது. திருமணம் செய்து கொள்ளக் கருதிய தலைவன் பெரும்பொருள் சேர்த்து வருவதற்காகக் காடுகளையும், நாடுகளையும் கடந்து பலநாள் பிதலாகும். பாலைத்திணையில் தலைவன் பிரிந்து செல்லக் கருதுகிறான் என்ற கூற்றாகவே பாடல்கள் அமைந்துள்ளன. தலைவனைப் பிரியக் கருதினாலே தலைவியின் உயிர் தரிக்காது நின்று போகும். இப்படியிருக்க தலைவன் பிரியக் கருதினால், அது பிறர் பழிக்கு ஆளாகுமே என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

**பொற்கிளர் சேவல்வரி மரல்குத்த**

**நெறிதூர் அருஞ்சுரம் நாம்உன்னி அறிவுஇட்டு**

**அலர்மொழி சென்ற கொடியக நாட்ட**

**வலன் உயர்ந்து தோன்றமலை** (ஐ-எ-பா-31)

தலைக்கொண்டையுடன் இருக்கின்ற காட்டுக்கோழி, வரிக்கோடுடைய கற்றாழையைக் கொத்த நடக்கும், பாதை தடைபட்டிருக்கும், கடப்பதற்கு அரியதான, பாலைநிலப் பாதையில் உள்ள இன்னல்களை நாம் நினைத்துப் பார்த்து, நாம் வருந்துவதைக் கண்டறிந்த அயலார் தூற்றும் பழிமொழி, மலைமேல் நட்ட கொடிச்சீலை வலமாகச் சுற்றிப்பறந்து பலர் காணத் தோன்றுவது போலாகிவிட்டதே தோழி! அதாவது நம் தனிமை, வருத்தம், தவிப்பு மற்றவர் நம் களவொழுக்கம் பற்றிப் பழமொழி கூற ஏதுவாகிவிட்டதே என்று தலைவி தோழியிடம் கூறித் தவிக்கிறாள்

பாணனை வெறுத்துத் தலைவி சினந்து உரைப்பது

**பேதை, புகலை ; புதல்வன் துணைச் சான்றோன்**

**ஓதை மலில மகிழ்ந்தற்கு யாஅம் எவன் செய்தும்?**

**பூ ஆர் குழல் கூந்தல் பொன் அன்னார் சேரியுள்**

**ஓவரது செல்-பாண!-நீ** (ஐ-எ-பா-48)

பாணனே! மருத நில ஒலி மிகுந்த ஊர்த் தலைவனுக்குப் பிறந்துள்ள அன்பு மகனையே பெருந்துணையாகக் கொண்டுள்ள எனக்கு என்ன செய்ய முடியும். தலைவன் இருக்கம் பூ வைத்துக் கூந்தலை அலங்காரம் செய்து தம் சிவந்த மேனி காட்டி ஈர்த்துள்ள பரத்தையர் வாழும் சேரிக்கு இடைவிடாமல் செல்வாயாக. (கணவனை ஈர்க்கும் பரத்தையர் தங்கம் போன்ற நிறத்தினர் எனும் கருத்தைப் பொன் அன்னார் சேரி எனும் தொடர் காட்டுகிறது. தனக்குத் தன் செல்வ மகனே துணை என்பதைப் புதல்வன் துணை எனும் தொடர் புலப்படுத்துகிறது.)

**முடிவுரை**

ஐந்திணை எழுபது காட்டும் வாழ்வியல் கருத்துக்கள் என்னும் இவ்வியலில், வாழ்வியல் என்பது எப்படி வேண்டுமானாலும் வாழ்வது அன்று, இப்படித்தான் வாழ வேண்டும் என்னும் கருத்து விளக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் வாழ்க்கை நெறியானது அகம், புறம் என இரண்டாகப் பகுக்கப்பட்டு, அகமானது இல்லற வாழ்க்கை பற்றியும், புறமானது போர் பற்றிய செய்திகளைப் பற்றியும் கூறுகிறது என்னும் கருத்து விளக்கப்பட்டுள்ளது. அகவாழ்க்கையானது களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை எனப் பகுக்கப்பட்டு, களவு வாழ்க்கையில் தலைவன், தலைவியிடம் இயற்கைப்புணர்ச்சி நடத்தும் நிகழ்வு குறித்த கருத்து விளக்கப்பட்டிருக்கிறது. இயற்கைப் புணர்ச்சியின் வேறு பெயர்கள் மற்றும் இது நிகழும் சூழலும் இப்புணாச்சிக்கான காரணமும் கூறப்பட்டுள்ளது. தலைவன் தலைவியைச் சந்திப்பதற்கு இரவு நேரத்தில் வருவதனைத் தோழி தடுத்து அவனை வரைந்து கொள்ளுமாறு வலியுறுத்தும் கருத்து விளக்கப்பட்டுள்ளது.

களவு நீட்டிப்பதால் ஏற்படப்போகும் விளைவுகளைத் தோழி முன்னரே அறிந்து தலைவனைத் திருமணம் செய்து கொள்ளுமாறு நெருக்கடி கொடுக்கும் பாடலின் கருத்து விளக்கப்பட்டுள்ளது.

தலைவியின் வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளாக பிரிவும், செலவழுங்களும், அலர், வேலன் வெறியாட்டு, பரத்தை ஒழுக்கம் போன்ற கருத்துக்கள் ஆராயப்பட்டுள்ளன.

சங்ககால மக்களின் வாழ்வானது களவு, கற்பு என்ற இருநிலையில் அமைந்திருந்ததை ஐந்திணை எழுபது பாடல்கள் விளக்குகின்றன. மேலும் களவு வாழ்வில் தலைமக்களின் முதல் சந்திப்பினை இயற்கைப் புணர்ச்சி என்றும இப்புணர்ச்சியின் வேறு பெயர்கள் மற்றும் இது நிகழும் சூழலும் இப்புணர்ச்சிக்கான காரணமும் கூறப்பட்டுள்ளது.

இயற்கைப் புணர்ச்சியைத் தொடர்ந்து தலைமக்கள் இரண்டாவதாகச் சந்தித்தலை, இடந்தலைப்பாடு என்ற துறையில் அமைந்த நற்றிணைப் பாடல் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியம் செய்யுளியல், நூற்பா-487
2. அகப்பொருள் விளக்கம், நூ.32
3. தொல்காப்பிய் களவியல், நூ.90
4. அகப்பொருள் விளக்கம், நூ.38
5. தொல்காப்பியம் களவியல், நூ.129
6. ஐந்திணை எழுபது, பா.எண்.14
7. மேலது, பா.எண.10
8. வ.சுப.மாணிக்கனார், தமிழ்க்காதல், ப.6